Nallur Branch Library


# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 213 ஆங்கீரச ஆனி 13 (27.06.1992) சனி


## தமிழ்-முஸ்லிம் புரிந்துணர்வு மிரட்டலால் கைவிடப்பட்டது

மட்டக்களப்பில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே புரிந்துணர்வு, நல்லுறவு ஏற்படுத்தும் வகையில் எடுக்கப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இரு சமூகங்களிடையில் நல்லுறவு ஏற்படுத்தும் வகையில் இப்பகுதியில் உள்ள கிறிஸ்தவ மதகுருக்களும் தமிழ் பிரமுகர்களுமாக தமிழ் - முஸ்லிம் புரிந்துணர்வு குழுக்களை அமைக்க முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும் இம் முயற்சிக்கு அரச அதிகாரிகள் இடையூறு விளைவித்ததாகவும் பெரும்பாலான முஸ்லிம்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததாகவும் — 04 பக்கம் பார்க்க

# போருக்குப் பணம் செலவாவதினால்

# சம்பள அதிகரிப்புத் திட்டம் தாமதம்!

### அரச ஊழியர் சம்பளத்திட்டம் குறித்து பிரதமர் விஜேதுங்க அறிவிப்பு

தற்போதைய வடக்கு, கிழக்கு போரினால் ஏற்பட்டுள்ள இராணுவச் செலவுகளை ஈடுசெய்ய அரசு பெருமளவு பணத்தை ஒதுக்க வேண்டியுள்ளதால் அரச ஊழியருக்கான சம்பள அதிகரிப்பை உடனடியாக அமுல்செய்ய முடியாதுள்ளதாக பிரதமர் விஜேதுங்க நேற்று கொழும்பில நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

இலங்கையின் தேசிய வருமானத்தில் 40 சதவீதம் வடக்கு கிழக்கு போருக்காக செலவிட அரசு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது இக்கவலை பிரதமர் டி. பி. விஜேதுங்க நேற்று வெளியிட்டார்.

"வடக்கு கிழக்குப் போர். ஜே. வி. பி. காலத்தில் சேதமான கட்டிடங்களை புனர் நிர்மாணம் செய்ய ஆயிரம் கோடி ரூபா தேவை இக்காரணங்களினால் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதில் தாமதம் ஏற்படுகிறது என பிரதமர் விஜேதுங்க குறிப்பிட்டார்.

எனினும் தேசிய சம்பளத் திட்டத்தை புதிதாக தயாரிக்க அரசு முடிவு செய்துள்ளது எனவும் வாழ்க்கை செலவின் அதிகரிப்பை ஈடு செய்யும் வகையில் புதிய சம்பளத் திட்டம் இருக்க வேண்டும் என்பதை அரசு உணர்கிறது எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

### பளுகாமத்தில் படைசூடு 12 பொதுமக்கள் காயம்

மட்டக்களப்பு பளுகாமத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட சரமாரியான துப்பாக்கிச் சூட்டில் 12 பொதுமக்கள் காயமடைந்தனர்.

கடந்த புதன்று பளுகாமத்தை சுற்றிவளைத்த படையினர் பொதுமக்கள் மீது சூடு நடத்தியதுடன் அங்கு பலரை கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்றனர்.

### ★ வங்கியாளர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு நியமனம் வழங்கப்படும்

1990 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற வங்கியாளர் பரீட்சையில் சித்தியடைந்த யாழ் மாவட்ட பரீட்சார்த்திகள் பலர் யாழ் அரச அதிபரை சந்தித்து தமக்கு வங்கிகளில் நியமனம் வழங்க ஆவன செய்யும்படி கேட்டுள்ளனர்.

இப்பரீட்சையில் சித்தியடைந்த பெரும் பாலானோர் ...04 ஆம் பக்கம் பார்க்க

### ராவின் நடைக்கு ஈடாக நடக்கமுடியாது அதிகாரிதிணறல்

இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் நடைக்கு பிரேசில் பாதுகாப்பு அதிகாரிகள் ஈடுகொடுக்க முடியாது திணறினராம். இம்மாத முற்பகுதியில் பிரேசிலில் நடைபெற்ற உலக சுற்றாடல் மகாநாட்டில் கலந்துகொள்ள நரசிம்மராவ் அங்கு சென்றிருந்தார்.

அங்கு எல்லா நாட்டு தலை —04 ஆம் பக்கம் பார்க்க

### ஊரடங்கு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கிலைத்தீவு மாவட்டங்களில் இன்று காலை முதல் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்படுவதாக கூட்டுப் படை தலைமையகம் தெரிவித்தது.

### கலிபர் தாக்கு

கட்டைக்காடு - வெற்றிலைக்கேணி பகுதிகளில் தங்கியிருக்கும் படையினர் தொடர்ச்சியான கலிபர் தாக்குதலை மேற்கொண்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பகுதியில் ஹெலிகளின் நடமாட்டம் அதிகரித்து இருப்பதாகவும் அந்த செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. 47

### ஜப்பான் உதவி

அண்மையில் பெய்த மழை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கவென ஜப்பான் 45 லட்சம் ரூபாவை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

### எந்த இனமும் மற்ற இனத்திடம் கையேந்தக்கூடாது -ஜனாதிபதி

"எந்த இனத்தவரானாலும் எவருக்கும் கையேந்தாது வாழும் உரிமை வேண்டும்" இப்படி கூறியிருக்கிறார் ஜனாதிபதி பிரேமதாஸ

நேற்று முன்தினம் மொனராகலை புத்தளம் உதாவ நிகழ்ச்சியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

"இந்த நாட்டில் எந்த இனத்தில் பிறந்தாலும் எந்த பகுதியில் வாழ்ந்தாலும் எந்த இனமும் கையேந்தும் நிலையில் இருக்கக் கூடாது" என்றார் பிரேமதாஸ.

### செக்கோஸ்லோவேக்கிய அரசு இராஜினாமா

செக்கோஸ்லோவேக்கிய அரசு நேற்று இராஜினாமா செய்தது. இதன் மூலம் நாடு செக் மற்றும் ஸ்லோவக் என இரு குடியரசுகளாக பிரிவதை மேற்பார்வையிட ஓர் இடைக்கால அமைப்பு ஏற்பட வழி செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் மாரியான் காக்பா அவரது அமைச்சரவை இராஜினாமாவை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார்.

### அமைய எழுது வினைஞர் மேலும் 14 பேருக்கு நியமனம்

அமைய எழுது வினைஞர் போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்த 304 பேருக்கு எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்துக்கு முன்னதாக நியமனங்கள் வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்படுவதாக செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

304 பேரில் இதுவரை 124 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சில திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் வங்கிகள் தமது வெற்றிட விபரங்களை செயலகத்துக்கு தெரிவிக்க —04 ஆம் பக்கம் பார்க்க

### மறைந்த பேராசிரியருக்கு பல்கலைக்கழகத்தில் அஞ்சலி

யாழ் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் அமைவதற்கும் அதனுடைய வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியவர் காலஞ் சென்ற சட்டவைத்திய அதிகாரி பேராசிரியர் என். சரவணபவானந்தன் இவ்வாறு நேற்று கைலாசபதி அரங்கில் நடந்த அன்னாரின் அஞ்சலிக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய யாழ் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் எமது பிரதேசத்தை ஆக்கிரமிக்கும் சக்திகள் எமது மருத்துவ பீடத்தை மூடிவிடுவதற்கு முயற்சித்தபோது அதனைத் தடைசெய்வதில் முன்னின்று உழைத்தவர் பேராசிரியர் அமரர் சரவணபவானந்தன் எனக் குறிப்பிட்டார் — 04 ஆம்பக்கம் பார்க்க

### ★ கந்தளம கலாசாரப் பகுதியில்

# பிக்குமார்கள் எதிர்ப்பு தொிவித்தும்

# ஹோட்டல் அமைக்க அரசு முடிவு

கந்தளம பகுதியில் அரசு ஹோட்டல் அமைக்க முடிவு செய்துள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

கலாசார முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பகுதியில் ஹோட்டல் அமைக்க அரசு எடுத்த முயற்சிக்கு பௌத்த மஹாசங்கத்தினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வந்தனர். எனினும் அரசு தற்போது இப்பகுதியில் ஹோட்டலை அமைக்க முடிவு செய்துள்ளது.

கந்தளம பகுதியில் உல்லாசப் பயணி ஹோட்டல் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படுவதற்கு முன்னர் இது குறித்து நன்கு ஆராயப்பட்டுள்ளதாக சுற்றாடல் பாராளுமன்ற விவகார அமைச்சர் வின்சன்ற் பெரேரா நேற்று நடைபெற்ற வைபவ நிகழ்ச்சியில் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சமூக, பொருளாதார கலாசார பெருமானங்கள் மீது ஏற்படக் கூடிய —04 ஆம் பக்கம் பார்க்க

### உணவு முத்திரை பொருள்கள்

7 ஆவது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரையின் 3 ஆம் புள்ளிக்கு தற்போது உணவுப் பொருட்கள் பல நோ. கூ. சங்க கிளைகள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருவதாக யாழ். பல நோ. கூ. சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (42)

★ தேர்தல் இடாப்பில் பெயர்களைப் பதிய கெடுபிடி

# மலையக மக்களின் வாக்குப்பலத்தை குறைப்பதற்கு மறைமுக முயற்சி!

இந்திய வம்சாவளி மக்களைத் தேர்தல் இடாப்பில் பதிவதற்கு சில தேர்தல் திணைக்கள அதிகாரிகள் கெடுபிடி செய்து இடைஞ்சலாக இருந்து வருவதாக மலையகப் பகுதியிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய வம்சாவளி மக்கள் தமது பெயர்களைத் தவறாது தேர்தல் இடாப்பில் பதிந்து கொள்ள வேண்டுமென மலையக அமைப்புக்களும், இ.தொ.கா.வும் வற்புறுத்திவரும் அதே வேளை இந்த நடவடிக்கையை முறியடிக்கும் வகையில், இந்திய வம்சாவளி மக்களின் பெயர்களை தேர்தல் இடாப்புக்களில் பதிவதற்கு சில அதிகாரிகள் திட்டமிட்ட அடிப்படையில் தடையாக செயற்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மலையக மக்கள் தேர்தல் இடாப்புக்களில் தம்மைப் பதிந்து கொள்வதற்கு பிரஜாவுரிமைச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டுமென தேர்தல் திணைக்கள அதிகாரிகள் சிலர் வற்புறுத்தி வருகின்றனர். நாடற்றவர் பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டதால் புதிய சட்டத்தின் படி இலங்கையில் உள்ள இந்தியப் பிரஜைகள் அனைவரும் தற்பொழுது இலங்கைப் பிரஜைகளே எனவும் இதனால் அவர்கள் தம்மைத் தேர்தல் இடாப்பில் பதிந்து கொள்ள பிரஜாவுரிமைச் சான்றிதழைச்சமர்ப்பிக்க வேண்டியதில்லை எனவும் அமைச்சர் தொண்டமான் அறிவித்திருந்தார்.

எனினும் தேர்தல் திணைக்களம் அமைச்சரின் அறிவிப்பை நிராகரித்து, பதிவு செய்வதற்கு பிரஜாவுரிமைச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டுமென தற்போது அறிவித்துள்ளது.

இது குறித்து கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

'மக்களின் வாக்குகளைப் பறிக்கவா பிரஜா உரிமைச் சான்றிதழ் கேட்கிறார்கள்? இவ்வாறு இப்போது கோருவது அடிப்படை மனிதஉரிமைகளை மீறுவதாகும்' எனக் கண்டித்து இது தொடர்பாக மலையக தொழிற்சங்கங்கள் பலவும் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

'வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கு மலையக மக்களுக்கும், நாட்டின் ஏனைய மக்களுக்கும் வெவ்வேறான நடைமுறைகள் பின்பற்றப்படுவது ஏன்?' என்றும் தொழிற்சங்கங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் மலையக மக்களின் வாக்குப் பலத்தைக் குறைக்க மறைமுக நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

## ஹெலியிலிருந்து கலிபர் தாக்குதல்

நேற்று முன்தினம் மாலை 6. 30 மணியளவில் பூநகரி கல்முனை கடற் பிரதேசத்தை பல தடவைகள் வட்டமிட்ட ஹெலிகொப்டர் ஒன்று பின்னர் கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

இந்த ஹெலிகொப்டர் கொழும்புத்துறை, பாஷையூர், அரியாலை கிழக்கு கடற்கரையோரப் பகுதிகளையும் நீண்ட நேரமாக வட்டமிட்டுச் சென்றது. 47

## இறுதி ஆட்டத்திற்குத் தெரிவு

ஜெற்வின் விளையாட்டுக் கழகத்தினர் நடத்திவரும் மட்டுப்படுத்தப்பட்ட 7 பந்து மாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக அணி சோலம்பாம் அணியை 30 ஓட்டங்களால் தோற்கடித்து இறுதி ஆட்டத்தில் ஆடத் தகுதி பெற்றது. 16

## தீவக அணி சாம்பியனானது

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம் அதன் 21 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஜெற்வின் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் நடத்தி வந்த 7 வீரர்கள் மாத்திரம் பங்குபற்றும் உதைபந்தாட்டத்தில் தீவக விளையாட்டுக் கழக அணி சாம்பியன் ஆனது. 16

## பொதுக்கூட்டம்

யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிராண்ட் வீதியில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமை அலுவலகத்தில் இக்கூட்டம் நடைபெறும். (16)

## கனடா பாராளுமன்றத்தில் புதிய குடியேற்ற விதிகள்

கனடாவில் புதிய குடியேற்ற சட்டவிதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது கனடாவில் அமுலிலுள்ள சட்ட விதிகள் 1976 ஆம் ஆண்டு இயற்றப்பட்டவையாகும்.

கனடாவில் போலிக் குடியேற்றக்காரர்கள், குற்றவாளிகள், நலன்புரித் திட்டங்களில் மோசடி செய்வோர் ஆகியோரைக் கட்டுப்படுத்தவும் உண்மையான விண்ணப்பதாரிகளின் குடியேற்ற வழிமுறைகளை இலகுவாக்கவுமே இச் சட்டத்திருத்தம் கொண்டுவரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப் புதிய சட்டத்திருத்தத்தின்படி தற்பொழுது கனடாவில் வசிப்பவர்களின் இரத்த உறவினர்கள் கனடாவுக்குள் புகுவதற்கான வழிமுறைகள் இலகுவாக்கப்படும்.

## 4 அம்சத் திட்டம் பற்றி சு. க. தலைவர்களுக்கு விளக்கம்

இனப்பிரச்சினை தீர்வுக்கான தமது புதிய நான்கு அம்சத்திட்டம் பற்றி விளக்கமளிக்கும் பொருட்டு ஏழு தமிழ்க்கட்சிகளின் தலைவர்களடங்கிய குழுவொன்று நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, சமசமாஜக் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடியது.

இக் குழு கடந்த புதன்கிழமை கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர்களுடன் இது தொடர்பாகப் பேசியிருந்தமை தெரிந்ததே.

## கொழும்புத் துறைமுகத்தில் திடீர் தீ! கொள்கலன்கள் நாசம்

கொழும்புத் துறைமுகத்தில் நேற்று முன்தினம் நிறுத்தப்பட்டிருந்த ஹொங்கொங் கப்பலொன்று தீவிபத்துக்குள்ளாகியதாகத் தெரிவிக்கப்படுகின்றது பின்னர் தீ பரவாமல் அணைக்கப்பட்டது.

இதே நேரம் துறைமுகத்தின் பிறிதொரு பகுதியில் கப்பலில் இருந்து இறக்கி வைக்கப்பட்டிருந்த மூன்று கொள்கலன்கள் திடீரென தீப்பிடித்து எரிந்தன. இவற்றில் ஒரு கொள்கலன் முற்றாக எரிந்து நாசமாகியது.

## இந்து மாமன்ற கட்டிட வேலைகள் கொழும்பில் மீண்டும் ஆரம்பம்

நாலாவது மாடியுடன் நிறுத்தப்பட்டிருந்த கொழும்பு அகில இலங்கை இந்து மாமன்றக் கட்டிட வேலைகள் மீண்டும் துரித கதியில் ஆரம்பித்து நடைபெற்று வருகிறது.

இக் கட்டிடத்துக்கான 5. 10, 50, 100 ரூபா பெறுமதியான ரிக்கற்றுக்கள் விற்பனை செய்யப்படுவதுடன் அன்பளிப்புக்களும் பெறப்படுகின்றன

6 மாடிகளைக் கொண்டதாக இக் கட்டிடம் அமைய உள்ளது. மேல்மாடி கேட்போர் கூடமாகவும், 5 ஆம் மாடியில் நூலகமும், நான்காம் மாடியில் பேச்சாளர்கள், சமயப் பெரியார்கள், விருந்தினர்கள் தங்கியிருக்கும் இடமாகவும் ஏனைய மூன்று மாடிகள் வர்த்தக நிலையங்களாகவும் அமைய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது' 15

## மகாவலி குடியேற்றப் பகுதியில் 75 கிலோ மீற்றருக்கு மின்வேலி

மகாவலி விவசாயத்திட்டத்தின் எல்லைப் புறங்களில் மின்வேலிகளை அமைப்பதற்கு அரசு முடிவெடுத்துள்ளது

சுமார் 75 கிலோ மீற்றர் தூரத்திற்கு இந்த மின்வேலிகள் அமைக்கப்படவுள்ளன.

மகாவலி 'சி' வலயம் தெகியத்த கண்டிய பகுதியிலேயே இம் மின்வேலிகள் அமைக்கப்படவுள்ளன.

காட்டு யானைகளிடமிருந்து இப் பகுதி விவசாயிகளைப் பாதுகாப்பதற்காகவே இம் மின்வேலி அமைக்கப்படவுள்ளது

## தொழிலாளர் நெறி தெரிவுப்பரீட்சை செப்டெம்பர் 20 இல் நடைபெறும்!

யாழ். பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தொழிலாளர் கற்கை நெறிச் சான்றிதழ் வகுப்புக்கு மாணவர்களை புதிதாக அனுமதிப்பதற்கான எழுத்துத் தேர்வுப் பரீட்சை செப்டெம்பர் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளது.

இப் பயிற்சிக்கு விண்ணப்பிப்போருக்கு தற்சமயம் பல்கலைக்கழக பரீட்சைப் பகுதியினரால் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டுவருகிறது விண்ணப்பங்களை நிரப்பி திருப்பி அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 31.7.92 ஆகும்.

எழுத்துத் தேர்வுக்கு தகுதியுடையவர்களின் அனுமதி அட்டைகள் 1.9.92 இல் பல்கலைக்கழக தேர்வுக் கிளையில் நேரடியாக வழங்கப்படும் என்றும் தபாலில் அனுப்பி வைக்கப்படமாட்டாது என்றும் உரியவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் நேரில் வந்து பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் தெரிவித்தார். (15)

★ இடம்பெயர்ந்தவர்களுக்கு

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுயசார்பு தொழில் முயற்சி நிதியுதவி

"துயரங்களையே எதிர்கொண்டு வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களின் நலன் கருதி அவர்கள் மீது நம்பிக்கை வைத்து பொருளாதார உதவிகள் வழங்கக் கூடிய அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து சகல வளங்களையும் உபயோகித்து முழுவீச்சில் செயற்பட்டால் மட்டுமே போர்க்கால நெருக்கடிகளால் அல்லலுறும் மக்களின் வாழ்க்கை நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தி நெருக்கடிகளை வெற்றி கொள்ளலாம்".

"பொருளாதார தொழில் நுட்ப வல்லுநர்கள் சூழ்நிலைக்கும் நாட்டுக்குமேற்ற தொழில்களை இனங்காண உதவிகள் வழங்க முன்வரவேண்டும்".

இவ்வாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சுயசார்பு தொழில் முயற்சி நிதியம் தொடர்பாக வெளியிட்டுள்ள சிறு கைநூல் ஒன்றில் தெரிவித்துள்ளது

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அதன் சுயசார்பு தொழில் முயற்சி நிதியத்திலிருந்து இடம்பெயர்ந்த மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மாவட்டத்தில் 4919 கடன் உதவிகளை வழங்கியுள்ளது.

நடைமுறை மூலதன நிலுவை 30. 04. 1992 வரை அறுபது லட்சம் ரூபாவுக்கு மேலாகவும், சுழற்சி முறையில் வழங்கிய தொகை ஒரு கோடி எட்டு லட்சம் ரூபா வரையும் வழங்கப்பட்டுள்ளது. சேமிப்பு மிகுதியாக எட்டு லட்சத்து எழுபத்தெட்டாயிரம் ரூபா பயன்பெறுவோரால் வைப்பிலிடப்பட்டுள்ளது.

## 1989 இல் நியமனமானோரை உறுதிப்படுத்த நடவடிக்கை

போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்ததன் மூலம் 01-06-89 இல் இருந்து அதிபர் சேவை I, II III ஆம் தரங்களில் நியமனமானவர்களை அவர்களுடைய சேவையில் உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை கல்விச் சேவை ஆணைக்குழு எடுத்துள்ளது

இவ்வாறு நியமனமாகி கடமையாற்றும் அதிபர்களின் விவரங்களை அதற்குரிய படிவங்களில் நிரப்பி அவைகளை உறுதிப்படுத்தி உடனடியாக தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இவ் விவரங்கள் உடனடியாக கல்விச்சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படவுள்ளன. (15)

## வேதாந்த மடத்தில் குருபூசை விழா

சுந்தரர் மடம் - ஸ்ரீ சிவகுருநாத குரு பீடம் வேதாந்த மடத்தில் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளின் 24 ஆவது குருபூசை விழா குரு பீடாதிபதி ஸ்ரீமத் சோமசுந்தர வேத சுவாமிகளின் ஆசியுடன் சிறப்பாக நடைபெற்றது.

இவ் விழாவில் ஆசிரியர் வே. தம்பிஐயா, செல்வி ஸ்ரீமகள். ஸ்ரீரங்கநாதன், தேவார இசைமணி சாவடியூர் எம். ஆர். திருஞானசம்பந்தன் ஆகியோரின் திருமுறைப் பண்ணிசைப் பாராயணமும் இடம் பெற்றன. 18

## விற்பனை நிலையம்

வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் விற்பனை நிலையம் ஒன்று மந்திகையில் திறக்கப்பட்டுள்ளது. (10)

## யாழ். மாவட்டத்தில் மட்டும் 6 ஆயிரம் விதவைகள்!

யுத்த நடவடிக்கைகளினால் யாழ் மாவட்டத்தில் மட்டும் ஆறாயிரம் பெண்கள் தமது கணவன்மாரை இழந்து விதவைகளாகியுள்ளனர்.

இவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு தென்னிந்திய திருச்சபை மேற்கொண்ட மதிப்பீடொன்றில் இந்த விவரம் தெரியவந்துள்ளது.

சிறுவிளம்பரம்

சோதிடம்

கல்வி, விவாகம், தொழில் தடைகள் தீரவும், குடும்பப் பிரச்சினை, நோய் தீராத கஷ்டம், வறுமை நீங்கவும், அதிர்ஷ்டம் அழைக்கிறது சாதகத்துடன் நேரில் வரவும் பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம் ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம் 96, கோவில் வீதி, (ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் சந்தி) நல்லூர். 06053

# பண்டிதமணி சிந்தனைகள்

### அறிவு

அறிவு, அன்பு, அருள் என்னும் மூன்றும் அதிகாலைகள் தோறும் பெரிதுஞ் சிந்திக்கவேண்டியவை. இராத்திரியில் உறக்கத்துக்குப் போகும்போது அவைகளைப் பற்றிச் சற்றே சிந்தித்துக் கொண்டே உறங்கினால் அதிகாலையில் நித்திரை விட்டு எழும்பும்போது அவை சிந்தனைக்கு வரும்.

### சமயி

நீதியை விசாரிப்பதிலே - விசாரித்து அந்த நீதியிலேயே எவ்வித வஞ்சகத் தடையுமின்றி நிலை நிற்பதிலே-எவனுக்குச் சதா பரிசுத்த விருப்பம் உண்டோ அவன் சமயி.

### கடவுள்

நினைப்பு, மறப்பு, விழிப்பு, நித்திரை, பிறப்பு, இறப்பு முதலிய காரியங்கள் நமது வல்லமையைக் கடந்து நடக்கின்றன. அக்காரியங்களை நடத்திவைக்கும் பொருள் எது? அப்பொருள் நமது வல்லமையைக் கடந்த பொருள்; கடவுள்.

### உபகாரங்கள்

"இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற ஆறு" என்பது திருவாசகம்; இந்தச் சரீரமும் ஒரு பூமியே. உயிர்கள் வசிக்கின்ற இந்த உடம்பாகிய பூமியும் முன்னிலையாய்க் கிடக்கின்ற பூமியும் திருவருள் தந்த உபகாரங்கள், திருவருளை அடைவதற்கு உதவியானவைகள்.

### திருவருளின் கருத்து

நாம் ஏதொரு கருமத்தைச் செய்யும் போதும், செய்ய நினைக்கும் போதும் அத் திருவருளின் கருத்தை அறிய வேண்டும், திருவருளுக்குச் சம்மதமாயிருக்குமோ என்று சிந்திக்கவேண்டும். அவசரபுத்தியாகாது.

(இன்று பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் பிறந்தநாள்)

## 260 ரூபா படியை வழங்க ஜனாதிபதியிடம் கோரிக்கை

முன்னர் உறுதியளிக்கப்பட்டதுபோல் ஓய்வூதியம் பெறுவோருக்கு 260 ரூபா படியை வழங்குமாறு அகில இலங்கை அரசாங்க ஓய்வூதியர் சங்கம் ஜனாதிபதியை கோரியுள்ளது.

மேற்படி சங்கத்தின் தலைவர் டீ.எம் பெரேரா அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

முன்னைய ஜனாதிபதி பிரதம மந்திரியாக இருந்த காலத்தில் ஓய்வூதியர்களுக்கு 260 ரூபா படி வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது. அன்றைய பிரதமர் ஜனாதிபதியாகியும், வாக்குறுதி வழங்கப்பட்டும் பல வருடங்களாகிவிட்டபோதிலும் இந்த 260 ரூபா படி இன்னமும் ஓய்வூதியகாரர்களுக்கு கிடைக்கவில்லையெனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

ஓய்வூதியகாரர்களுக்கு 260 ரூபா படி வழங்கப்படவேண்டுமென யாழ் மாவட்ட ஓய்வூதியர் சங்க சம்மேளனம் ஜனாதிபதியை ஏற்கனவே கோரியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (26)

## காத்தான்குடி முஸ்லிம்மீனவர்க்கு வெளிநாட்டு உதவிகள்

வடக்கு கிழக்குப் பகுதியில் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு வழங்கவென வெளிநாட்டு அமைப்பு ஒன்றினால் வழங்கப்பட்ட நிதியின் ஒரு பகுதி காத்தான்குடி முஸ்லிம் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

இந்த நிதியைப்பெற விண்ணப்பித்த மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மீனவர்களுக்கு அவற்றை வழங்குவதற்கு பல ஆவணங்கள் அதிகாரிகளினால் கோரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பண்டத்தரிப்பு கோட்டப் பிரிவில் 8 பரீட்சை நிலையங்கள்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவில் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு 8 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வலி வடக்கு, சாவகச்சேரி பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள மாணவர்களும் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு வசதியாக இந்த நிலையங்கள் அமைக்கப்படுவதாம். (18)

## பாதயாத்திரை செல்ல அப்போது இவர்களால் முடியவில்லை

\- ஜனாதிபதி

அரசியல்வாதிகளையும், சமயப் பெரியார்களையும், அப்பாவிப் பொதுமக்களையும் தெற்கில் ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்கள் கொன்று குவித்தபோது கண்ணீர் வடிக்கவும், பாதயாத்திரை செல்லவும் எவரும் இருக்கவில்லை.

தென்பகுதிப் பயங்கரவாதத்தை அரசு ஒழித்துக்கட்டியதினால்தான் இப்போது அரசை விமர்சித்து பாதயாத்திரை செல்லவும், கூட்டம் வைக்கவும் எதிரணியினரால் முடிகிறது.

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாச வுதுளையில் கம் உதாவ விழாவில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

★ நவீன ஆயுதங்களும் பயன்படுத்தப்படுகிறது

# தெற்கில் 3 மாதங்களாக பெரும் கொள்ளைச் சம்பவங்கள்!

கடந்த மூன்று மாதங்களாக நாட்டின் தென்பகுதியில் பெரும் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பெரும்பாலான கொள்ளைச் சம்பவங்களில் நவீன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இக்கொள்ளைச் சம்பவங்களைத் தடுக்க மாவட்ட பொலிஸ் அதிபர்கள் உடன் நடவடிக்கையெடுக்க வேண்டுமென பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

## ஜூலை மாதம் தாக்கலாகும்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தலைவர் பத்மநாபா கொலை வழக்கின் குற்றப் பத்திரிகை ஜூலை முதல் வாரத்தில் சென்னை தனி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளதாக சென்னைச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

## கொள்ளை முயற்சியிலீடுபட்ட இராணுவச் சிப்பாய் கைது!

தென்பகுதியில் கொக்கல என்ற இடத்தில் ஆயுதங்களுடன் வந்து வீடொன்றைக் கொள்ளையிட முயன்ற கோஷ்டியொன்றை அப்பகுதிப் பொதுமக்கள் மடக்கிப் பிடித்தனர்.

இக்கொள்ளை முயற்சியின் போது பிடிக்கப்பட்டோரில் ஒருவர் இராணுவச் சிப்பாய் எனத் தெரியவந்திருக்கிறது.

## கே. சி. சி. சி போட்டிகள்

கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணத்திற்காக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் 30 பந்து மாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான 13 விளையாட்டுக் கழகங்கள் கலந்துகொள்ளவுள்ள இப் போட்டியின் முதற்கட்ட ஆட்டங்கள் 27 ஆம் திகதி தொடக்கம் யூலை 1 ஆம் திகதிவரை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்று இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கன்னாகம் விக்னா விளையாட்டுக்கழக அணி மோதும்.

## யாழ். சின்ன வெங்காயம் கொழும்பில் கிலோ 42 ரூபா!

கொழும்பில் யாழ்ப்பாண வெங்காயத்திற்கு பெரும் கிராக்கியேற்பட்டுள்ளது. அங்கு தற்போது ஒரு கிலோ யாழ் சின்ன வெங்காயம் 42 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாண வெங்காயத்தின் சந்தையைக் கொழும்பில் பிடித்திருந்த புத்தளம் வெங்காயத்தின் உற்பத்தி குறைந்துள்ளதனாலேயே இன்று இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (26)

## பௌத்த ஆலயங்களைப் புனரமைக்க ஜப்பான் இந்தியாவுக்கு நிதி உதவி

இந்தியாவில் பழுதடைந்த நிலையிலுள்ள பௌத்த ஆலயங்களைப் புனரமைப்பதற்கு ஜப்பான் அரசு உதவி வழங்கவுள்ளது.

இதற்கென ஜப்பான் அரசு ஐந்து இலட்சம் டொலர்களை இந்தியாவுக்கு வழங்கியுள்ளது.

## ஓவியக்காட்சி ஒத்திவைப்பு

ஜூலை மாதம் 8,10,11 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த யாழ். [illegible] பாடசாலை மாணவர்களுக்கான ஓவிய, சிற்பக் கண்காட்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இக்காட்சி செப்டெம்பர் மாதம் முதல் வாரத்தில் நடத்தப்படவுள்ளது.

## ஒரு கோடி 20 இலசம் பேருக்கு புகையிலை எமனாகிறது!

வருடாந்தம் ஒரு கோடியே இருபது இலட்சம் பேர் உலகில் புகையிலைப் பாவனையால் ஏற்படும் புற்றுநோயினால் மரணமடைகிறார்கள்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் இரசாயனவியற்துறை பேராசிரியர் லெஸ்லி குணதிலக இவ்விபரத்தினைத் தெரிவித்தார்.

★ நேற்று 26 ஆம் திகதி

## தென்மேற்குப் பகுதியில் மழை: மலையகத்தில் கடும் காற்று!

நேற்று தென்மேற்குப் பகுதியில் வழமையான பருவப் பெயர்ச்சி மழை ஆங்காங்கே பெய்ததாகவும் மலை நாட்டுப் பகுதியில் பலத்த காற்று வீசியதாகவும் கொழும்பு காலநிலை அவதான நிலையம் அறிவித்தது.

இம் மாதம் 4 ஆம் திகதி ஏற்பட்டது போல் இன்னுமொரு பெருவெள்ளம் நேற்று 26 ஆம் திகதி ஏற்படுமென தெரிவிக்கப்பட்ட வதந்தி தென் பகுதியை பெரும் பரபரப்புக்கு உள்ளாக்கியிருந்தமை தெரிந்ததே.

எனினும் நேற்றைய மழை, காற்று என்பன வழமையானதே என்றும் அபாயமான காலநிலை எதுவும் ஏற்படவில்லை எனவும் காலநிலை அவதான நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

## கிழிந்த, சிதைந்த நோட்டுக்களை ஏற்க வங்கி மறுப்பு!

கிழிந்த, சிதைந்த நோட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளை அறிவித்துள்ளது.

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் பணத்தை வைப்பிலிட வரும் வாடிக்கையாளர்களிடமிருந்து மறு அறிவித்தல் வரை கிழிந்த சேதமடைந்த ரூபாய் நோட்டுகள் ஏற்கப்படமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது (10)

## அமெரிக்க வெளியுதவித் திட்டத்தில் 130 கோடி டாலர் வெட்டு

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் வெளியுதவித் திட்டத்தில் 130 கோடி டாலர் தொகையை குறைப்பதற்கு அமெரிக்க பிரதிநிதிகள் சபை தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கை செயற்படுத்தப்பட்டால் இரண்டு கோடியே 40 இலட்சம் டாலர் அமெரிக்க உதவி இந்தியாவுக்கு கிடையாது போகும்.

வட அத்திலாந்திக் ஒப்பந்த ஸ்தாபனம் 'நேட்டோ' நாடுகளுக்கான இராணுவ மானிய உதவிகள் அனைத்தையும் நிறுத்துவதற்கு இந்த வெட்டு வழிவகுக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யா [illegible] நாடுகளுக்கான அமெரிக்க 40 கோடி டாலர் அமெரிக்க உதவி உலக வங்கி மற்றும் பிற சர்வதேச நிறுவனங்களுக்கான 3 கோடி 60 இலட்சம் டாலர் உதவி என்பனவும் கூட இந்த வெட்டினால் பாதிப்புறும்.

## ரயில் பாதை விஸ்தரிப்பு வேலைகள் ஆரம்பம்!

கதிர்காமம் - மாத்தறையில் பாதை விஸ்தரிப்பு வேலைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

இன்னும் 3 வருட காலத்தினுள் கதிர்காமத்திற்கருகில் சேவையை ஆரம்பிக்கக் கூடியதாக இருக்குமெனப் புகையிரதப்பகுதி தெரிவித்தது.

மட்டக்களப்பு-பொத்துவில் ரயில் பாதை விஸ்தரிப்பு வேலைகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதற்கான காணிகளை அளக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

# ராஜ்யசபா தேர்தல் முடிவு பி. ஜே. பி. முன்னணியில்

இந்திய ராஜ்ய சபாவுக்கு இரண்டு ஆண்டுகளுக்கொரு முறைநடைபெறும் தேர்தலில் நேற்று முன்தினம் உத்திர பிரதேசம், ராஜஸ்தான், மகராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலிருந்து 22 பேர் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

இவர்களில் பி. ஜே. பி தலைவர் டாக்டர் முரளி மனோகர் ஜோஷி, பி. ஜே. பி. துணைத் தலைவர் பண்டாரி, ராஜ்ய சபைத் துணைத் தலைவர் டாக்டர் அப்துல்லா அகிலபாரத காங்கிரஸ் ஐ கமிட்டி பொதுச் செயலர் சிசிக்குமார்சிந்தே. முன்னாள் மத்திய அமைச்சர் முக்தி மொகமட் ஷெய்யுத் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பீகார் மாநிலத்தில் நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணுவதை இந்திய தேர்தல் கமிஷன் நிறுத்திவைத்துள்ளது.

அறிவிக்கப்பட்ட 22 முடிவுகளில் பாரதிய ஜனதாக் கட்சி 10 இடங்களையும், காங்கிரஸ் ஐ 6 இடங்களையும், ஜனதாதள் இரண்டு இடங்களையும், சமாஜவாதி ஜனதாக் கட்சி, ஜனதாதள் ஏ. சிவசேனை மற்றும் சுயேச்சை என்பன தலா ஒரு இடத்திலும் வெற்றி பெற்றுள்ளன.

பீகார் மாநிலத்தில் இடம்பெற்ற வாக்களிப்பின் போது பதியப்பட்ட வாக்குகளை உடனடியாக எண்ண வேண்டுமென ஆளும் ஜனதாதள், மற்றும் சமாஜவாதி ஜனதாக் கட்சி என்பன கோரியுள்ளன.

பீகாரில் 7 ராஜ்யசபா இடங்களுக்கும் 11 சட்ட மேலவை இடங்களுக்கும் தேர்தல்கள் நடைபெற்றன. வாக்குப்பதிவின் போது வாக்குச் சீட்டுக்கள் பறிக்கப்பட்டதாக புகார் செய்யப்பட்டதை அடுத்தே பீகாரில் பதிவான வாக்குகளை எண்ணுவதை தேர்தல் கமிஷன் நிறுத்திவைத்துள்ளது.

# கடந்த 60 நாள்களில் 4 இராணுவ நடவடிக்கைகள்

கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் கடந்த திங்கள் வரையிலான 60 நாள்களில் தமிழீழத்தில் 4 இராணுவ நடவடிக்கைகள் நடைபெற்றுள்ளன.

இக்காலப் பகுதியில் நடந்த மோதல்களில் 281 படையினர் பலியாகினர் 146 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. 158 புலிப் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

# நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் திருமலையில் அமைக்கப்படும்

திருமலையில் நிலக்கரி மின்சார உற்பத்தி நிலையமொன்று அமைக்கப்படவுள்ளதாக எரிசக்தி மின்சக்தி அமைச்சர் சந்திரா பண்டார தெரிவித்துள்ளார்.

1997 ஆம் ஆண்டிற்கு முன் இந்த நிலையம் செயற்பட ஆரம்பிக்கும். இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

# மூன்று கோடி ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட்டது

வவுனியாவில் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி நடமாடும் சேவையின் போது வடக்குக் கிழக்கில் பாதிப்புற்றோருக்கென நஷ்டஈடாக 3 கோடி ரூபா வழங்கப்பட்டதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

இதில் 40 இலட்சம் ரூபா அரச ஊழியர்களுக்கும் ஏனையோருக்கு இரண்டு கோடி 60 இலட்சம் ரூபாவும் நஷ்டஈடாக வழங்கப்பட்டதாக அச்செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

# தடுப்பூசி போட்ட நாய்கள் கழுத்தில் நம்பர் தகடு

நாய்களுக்கு விசர் வராமல் தடுப்பூசி போட்டதன் அடையாளத்தை அறியும் முகமாக நாயின் கழுத்தில் தற்பொழுது நம்பர் தகடுகள் கட்டப்படுகின்றன.

இதனால் வீதிகளில் திரியும் கட்டாக்காலி நாய்களை இலகுவாக அவைகளை பிடிப்பது சுலபம் என யாழ் மாநகர சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ் மாநகர வட்டார ரீதியாக நாய்களுக்கு விசர் நோய் வராமல் தடுப்பூசி போடப்பட்டு வருவதாகவும் தடுப்பூசி போடாதவர்கள் உடன் தமது நாய்களுக்கு தடுப்பூசி போடுமாறும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

# வங்கி நியமனம் குறித்து தவறான தகவலாம்

அண்மைய எழுதுவினைஞர் பரீட்சையில் சித்தியடைந்தோரில் அதிக புள்ளி பெற்றவர்களுக்கே வங்கிகளில் நியமனம் வழங்கப்படும் என்ற தகவல் தவறானது என சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதிக புள்ளி எடுத்து வேறு திணைக்களங்களில் தற்போது நியமனம் பெற்றோர்கள் வங்கிகளுக்கு நியமிக்கப்படமாட்டார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதிக புள்ளி பெற்று நியமிக்கப்பட்ட சிலர் தமக்கு வங்கிகளில் நியமனம் வழங்கப்படுமா எனக் கேட்டு செயலகத்துக்கு வந்துள்ளதாகவும் அவர் மேலும் சொன்னார். 47

★ சென் ஹென்றீஸ் கல்லூரி

# உயர்தர வகுப்புகள் மீண்டும் பழைய இடத்தில்

இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரியின் உயர்தர வகுப்புக்கள் மீண்டும் நடத்தப்படுகின்றன.

இம் மாதம் 11 ஆம் திகதி இப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சென் ஹென்றீஸ் கல்லூரி சிலகாலம் றோ. க. பாடசாலைக்கு இடமாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதேபோல மாதகல் நுணசை வித்தியாலயமும் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் சிறப்பாக வகுப்புக்களை நடத்திவந்தன.

இங்கு மாணவர் வரவு மிகக் குறைவாக இருப்பதாலும் மாதகல் பகுதிக்கு மீண்டும் பொதுமக்களில் சிலர் திரும்பி வருவதாலும் மாதகல் சென் ஜோசப் கல்லூரியில் மீண்டும் வகுப்புக்கள் நடத்த ஆலோசிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 26

## வீட்டிலுள்ள மூவரை நாய் கடித்தது

சங்கானையில் உள்ள வீடொன்றில் வளர்க்கப்பட்ட நாய் ஒன்று வீட்டுக்காரர் உட்பட மூவருக்குக் கடித்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. 18

ராவின்...

வர்களுக்கும் அளிக்கப்பட்டது போன்று இந்தியப் பிரதமருக்கும் பிறசில நாட்டு பாதுகாப்பு பிரிவினர் பாதுகாப்பு வழங்கினர்.

ஆனால் இவர்களால் பிரதமர் நரசிம்மராவின் நடைக்கு ஈடுகொடுக்க முடியாது போய் விட்டதாம்

"உங்கள் பிரதமரை மெதுவாக நடக்குமாறு தயவு செய்து கூறுங்கள் என பிறேசில் அதிகாரிகள் நரசிம்மராவுடன் சென்ற இந்திய விசேட பாதுகாப்பு படையினரிடம் கேட்டனராம்.

சித்தி -

இடம் பெயர்ந்து கொழும்பு போன்ற வெளி மாவட்டங்களில் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள வங்கிகளில் கூடுதலான வெற்றிடங்கள் இருப்பதால் இப்பரீட்சையில் சித்தியடைந்தோரை நிரப்புவதற்கு யாழ் அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அடுத்த மாதம் முற்பகுதியில் கொழும்பு செல்லும் போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி இது குறித்து முடிவு எடுத்து வருவார் எனவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன' (47)

பிக்குமார...

விளைவுகள் குறித்து ஆய்வுகள் மேற்கொண்டபின்னரே ஹோட்டல்கள் கட்டப்படுகின்றன என்று உல்லாசப் பயணத்துறை அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

சுற்றுலா ஹோட்டல் அமைப்பது பற்றியும் நன்கு ஆராயப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனநாயக நாடு ஒன்றில் எவரும் எந்த விடயம் தொடர்பாகவும் தமது அபிப்பிராயத்தை தெரிவிக்க முடியும் எனவும் அமைச்சர் தொண்டமான் மேலும் சொன்னார்.

புனித பிரதேசங்களுக்கு அருகே பல ஹோட்டல்கள் இயங்கி வருகின்றன அவை எமது கலாசாரத்தையோ விவசாயத்தையோ பாதிக்கவில்லை என உல்லாசப்பயணத்துறை ராஜாங்க அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.

சீரியம் - இரணவில என்ற இடத்தில் ஹோட்டல் அமைக்கும் யோசனை தெரிவிக்கப்பட்டது. ஆனால் அங்கு வாழும் மீனவக்குடும்பங்களை அது பாதிக்கும் என்பதால் அத்திட்டம் கைவிடப்பட்டது எனவும் ராஜாங்க அமைச்சர் லொகுகே குறிப்பிட்டார்.

# பொத்துவில் ரயில் பாதை அறிக்கை தயாராகிறது

மட்டக்களப்பில் இருந்து பொத்துவில் வரையிலான புதிய ரயில் பாதை அமைக்கும் வேலைகள் தொடர்பான அறிக்கைகள் தயாரிக்கப்படுவதாக போக்குவரத்து அமைச்சர் மொனராகல புத்தள கம்உதாவ நிகழ்ச்சியில் விஜயபால மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு முடிவதற்குள் களனி - மீரிகம ரயில் பாதை அகலமாக்கப்படும் எனவும் அவர் சொன்னார்.

★ இறுதிப் போட்டி

# ஐரோப்பிய உதைபந்தாட்டம் ஜேர்மனி டென்மார்க் மோதல்

ஐரோப்பிய உதைபந்தாட்ட வெற்றிக் கேடயத்திற்கான இறுதிப் போட்டி நேற்றிரவு சுவீடனில் நடைபெறவிருந்தது.

இறுதிப் போட்டியில் தற்போதைய உலக சம்பியனான ஜேர்மனியும் முதன் முறையாக இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ள டென்மார்க்கும் மோதுகின்றன.

# சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் குழு விஜயம்

சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளை அங்கீகரித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு அமைச்சர் மன்சூரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.

தற்போதைய நிலையில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி குறித்தும் அவர்கள் பாராட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# பெர்மிட் முறையில் மண்ணெண்ணெய்

தமக்கு பெர்மிட் முறையில் மண்ணெண்ணெய் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோருவதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மண்ணெண்ணெய் தொடர்ந்தும் கிடைக்காவிடில் தமது தோட்டப்பயிர்ச் செய்கை பாதிக்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்ததாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

# பதவி உறுதிப்படுத்தப்படும்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவில் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பெற்று 1. 6 1989 இல் முதலாம், இரண்டாம், மூன்றாம் தர அதிபர்களாக நியமிக்கப்பட்டவர்களது பதவிகள் வெகுவிரைவில் உறுதிப்படுத்தப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இத்தகைய நியமனம் பெற்ற அதிபர்கள் தங்களது பூரண விவரங்களை கோட்ட அலுவலக நிர்வாக அதிகாரியிடம் ஒப்படைக்குமாறு பிரதிக்கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். 18

# 39 பேருக்கு சீனாவில் நேற்று மரண தண்டனை

ஐ நாவின் போதைப் பொருள் பாவனை எதிர்ப்பு நாளாகிய நேற்று சீனாவில் 39 போதைப் பொருள் கடத்தல்காரர்க்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட இவர்கள் சுமார் 30 ஆயிரம் பொதுமக்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் நிறுத்தப்பட்டு அவர்கள் மீதான குற்றம் பகிரங்கப்படுத்தப்பட்டு மரண தண்டனை அறிவிக்கப்பட்டது.

தமிழ்

தெரிவிக்கப்படுகிறது:

இதே சமயம் புரிந்துணர்வு குழுக்கள் அமைக்க எடுக்கப்படும் முயற்சிகளை அறிந்து இராணுவத்தினர் இம்முயற்சியில் ஈடுபட்டவர்களை மிரட்டியதை அடுத்து இம்முயற்சிகள் கைவிடப்பட்டன.

அமைய...

வருவதையும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் திங்கட்கிழமை மேலும் 14 பேருக்கு நியமனம் வழங்கப்படும் எனவும் அதில் 10 பேர் யாழ் மாநகர சபைக்கும், நாலு பேர் காணிப்பதிவு திணைக்களத்துக்கும் நியமிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் சொன்னார்.

மறைந்த...

இவ்வஞ்சலிக் கூட்டத்தில் மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் எஸ். பாலசுப்பிரமணியம், விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் மகேஸ்வரன் கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, பேராசிரியர் கணேசலிங்கம் உட்படப் பலரும் இரங்கல் உரையாற்றினர் 28

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லங்கனி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில 27-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது